<u>**மக்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்!**</u>

<u>**சனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பது தொடர்பான வழிகாட்டல்**</u>

01. இவ்வழிகாட்டல்கள் சனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பது தொடர்பான வழிகாட்டல்கள் என குறிப்பிடப்படுகிறது.

02. அரசியலமைப்பின் 33(2) (உ) உறுப்புரையின்வண்ணம் சனாதிபதி ஒருவருக்குள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி சனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பது தொடர்பாக இவ்வழிகாட்டல்கள் உரித்தாவதுடன், அரசாங்கத்தின் சட்ட உத்தியோகத்தர்களாக முனைப்பாக பணியாற்றும் பதவிநிலையை அடிப்படையாகக் கொண்டு சனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு இவ்வழிகாட்டல்கள் உரித்தாகாது.

03. சட்டத்துறையில் உயர்நிலையை அடைந்துள்ள மற்றும் நடத்தை மற்றும் தொழில் நடவடிக்கைகள் தொடர்பாக நேர்மைத் தன்மையில் சிறந்த தரத்தைப் பேணிச் செல்லும் இலங்கையின் பிரசையானாலும் வேறு ஒரு நாட்டின் குடியுரிமை பெற்றுக்கொள்ளாத, நொத்தாரிசு தொழில் வாண்மைத்துவத்தில் ஈடுபடாத மற்றும் பட்டியலிடப்பட்ட சட்டத்தரணியாக பணியாற்றாத உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணிகள் (இதனகத்துப்பின் சட்டத்தரணி, சட்டத்தரணிகள், சட்டத்தரணியொருவர் அல்லது சட்டத்தரணி என குறிப்பிடப்படும்) சனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிப்பதற்கு சனாதிபதி அவர்களினால் பரிசீலிக்கப்படலாம்.

04. கீழ்வரும் எடுகோள்களை பூர்த்தி செய்துள்ள சட்டத்தரணியொருவர், சட்டத்துறையில் உயர்நிலையை அடைந்துள்ள நபராக கருதப்படலாம்.

(அ) குறைந்தபட்சம் தமது விண்ணப்பத்தை கையளிப்பதற்கு அண்மித்த 20 ஆண்டுகளினுள் இலங்கையில் எந்தவொரு நீதிமன்றினாலும் பட்டியலிடப்பட்ட சட்டத்தரணி ஒருவரின் ஆலோசனையின் கீழ் முனைப்பாக வழக்குகளை கொண்டு சென்ற சட்டத் தொழில் வாண்மைத்துவத்தில் ஈடுபட்டுள்ள சட்டத்தரணியொருவராக இருத்தல் மற்றும் ;

ஆனாலும் 20 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்யாதிருப்பினும் ஏனைய சகல எடுகோள்களை பூர்த்தி செய்துள்ள மற்றும் 15 வருடங்களுக்கு மேற்பட்ட

முனைப்பான சேவைக் காலமுடைய உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணிகளும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

(ஆ) சட்டத்துறையின் வளர்ச்சிக்காக சட்ட தர்க்கங்களின் மூலம் முனைப்பான பங்களிப்பை வழங்கியுள்ள சட்டத்தரணியொருவராக இருத்தல் மற்றும் ;

(இ) கனிஷ்ட சட்டத்தரணிகளுக்கு பயிற்சி அளித்துள்ள சட்டத்தரணியொருவராக இருத்தல்.

05. கீழ்வரும் எடுகோள்களை பூர்த்தி செய்யும் சட்டத்தரணியொருவர், சட்டத்துறையில் உயர்நிலையை அடைந்துள்ள மற்றும் நடத்தை மற்றும் தொழில் நடவடிக்கைகள் தொடர்பாக நேர்மைத் தன்மையில் சிறந்த தரத்தைப் பேணிச் செல்லும் ஒருவராக கருதப்படலாம்.

(அ) தொழில்ரீதியாக நம்பிக்கைத் தன்மை மற்றும் சுதந்திரத்தன்மையை உயர்மட்டத்தில் வெளிப்படுத்தல் மற்றும் ;

(ஆ) உயர்நீதிமன்றத்தினால் அல்லது இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் ஒழுக்காற்று கட்டளைக்குட்படுத்தப்படாத மற்றும் நீதிமன்றமொன்றினால் தொழில்ரீதியான கடமை தவறுதல் அல்லது தகாத செயலொன்றிற்காக குற்றவாளியாக்கப்படாத மற்றும் வங்குரோத்து நிலைக்குட்படாத மற்றும் நீதிமன்றத்தை அவமதித்தல் தொடர்பாக குற்றவாளியாக்கப்படாத மற்றும் போக்குவரத்துக் கட்டளைச் சட்டத்தின் கீழ் சிறு குற்றங்களைத் தவிர்த்த உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நீதிமன்றமொன்றினால் ஏதேனும் குற்றத்திற்காக குற்றவாளியாக்கப்படாத சட்டத்தரணியொருவராகுதல் மற்றும் ;

(இ) நன்நடத்தை மற்றும் நற்பெயருடைய சட்டத்தரணியொருவராகுதல்.

06. சட்டத்துறை தொடர்பாக குறிப்பிட்ட சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களில் பொறுப்பேற்றிருந்த பதவிகள் மற்றும் அதன்மூலம் இலங்கைக்கு புகழ் தேடித்தருதல் அல்லது சட்டத்தரணி ஒருவராக அவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட ஆவணங்கள் / நூல்கள் (பொழிப்புக்கள் அல்லாத) வெளியிட்டிருத்தல் தொடர்பாக கவனத்திற்கு உட்படுத்தலாம்.

07. விண்ணப்பங்களைக் கோரல்

(அ) சனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்காக சனாதிபதியினால் தேவைக்கேற்ப அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் இங்கு குறிப்பிடப்பட்ட தகைமைகள் மற்றும் எடுகோள்களைப் பூர்த்திசெய்துள்ள சட்டத்தரணிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரமுடியும்.

(ஆ) தமது தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் விண்ணப்பங்களை சனாதிபதி செயலாளருக்கு வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தினமோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(இ) கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத் தன்மை மற்றும் குறித்த தகைமைகளின் மற்றும் எடுகோள்கள் தொடர்பாக பரிசீலித்துப் பார்ப்பதற்கு சனாதிபதியினால், சனாதிபதி செயலாளரின் தலைமையில் மூன்று பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படுமென்பதுடன், அந்தக் குழுவின் அறிக்கை ஆராயப்பட்டதன் பின்னர் தகைமையுள்ள சட்டத்தரணிகள் சனாதிபதி சட்டத்தரணிகளாக அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய நியமிப்பதற்கு சனாதிபதியினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

08. சனாதிபதி சட்டத்தரணி ஒருவராக நியமிப்பதற்கு முன்பாக விண்ணப்பதாரரின் பொருத்தமான தன்மை தொடர்பாக உயர்நீதிமன்ற நீதியரசர் / அல்லது சட்டமா அதிபரின் கருத்தை சனாதிபதியினால் விசாரித்தறிய முடியும்.

09. விண்ணப்பதாரரால் நேரடியாக அல்லது மறைமுகமாக மூன்றாந் தரப்பினர்மூலம் குறித்த விண்ணப்பப்பத்திரம் தொடர்பாக அல்லது சனாதிபதி சட்டத்தரணியொருவராக நியமித்தல் தொடர்பாக எந்தவித தாக்கங்களும் செய்தல் தகைமையற்றதாகக் கருதப்படும்.

10. ஏதேனுமொரு விண்ணப்பதாரரினால் தமது விண்ணப்பப்பத்திரத்தின்மூலம் தவறான தகவல்கள் வழங்குதல் அல்லது போலியான ஆவணங்கள் சமர்ப்பித்தல் அல்லது காரணங்களை மறைத்தல் செய்யப்படும் தறுவாயில் அவ்விண்ணப்பப்பத்திரம் அக்காரணத்தினாலேயே செல்லுபடியற்றதாகக் கருதப்படும்.

11. சனாதிபதியினால் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்படும் சகல சனாதிபதி சட்டத்தரணிகளின் பெயர்கள் வர்த்தமானிப்பத்திரத்தில் பிரசுரிக்கப்பட வேண்டியதோடு, அத்தகவல்கள் சனாதிபதி செயலகத்தினால் பேணப்படும் இணையத்தளத்திலும் வெளியிடப்படுதல் வேண்டும்.

சனாதிபதியின் செயலாளர
சனாதிபதி அலுவலகம

காலி முகத்திடல்
கொழும்பு 01